கடலூர் தந்தை பெரியார் கலைக் கல்லூரியில் எம்.ஏ., எம்.எஸ்.ஸி., வகுப்புகள்.

*வினா எண் 361— திரு. பாபு கோவிந்தராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் தந்தை பெரியார் கலைக் கல்லூரியில் எம்.ஏ., எம்.எஸ்.ஸி. வகுப்புக்கள் ஆரம்பிக்க பல்கலைக் கழக மானியக் குழு அங்கீகாரம் அளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், துவக்கப்பட அரசு எடுத்துக்கொண்ட முயற்சி என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) கல்லூரியில் பட்ட மேற்படிப்பு துவங்க பல்கலைக் கழக மானியக் குழுவின் அங்கீகாரம் தேவையில்லை. பல்கலைக் கழகத்தின் இணைப்பு அனுமதி பெற்று பட்ட மேற்படிப்பு வகுப்புக்கள் துவங்கலாம். கடலூர், பெரியார் கலைக் கல்லூரியில் 1980–81 ஆம் ஆண்டு தாவரவியலில் பட்டப்படிப்பும் (B. Sc., Botany) வரலாற்றுத் துறையில் இளங்கலைப் பட்டப்படிப்பும் (B. A. History) துவங்கப்பட்டுள்ளது.

கங்கைகொண்ட சோழபுரத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி.

*வினா எண் 362—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கங்கைகொண்டசோழபுரத்தில் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் அண்மையில் ஆராய்ச்சி ஏதேனும் மேற்கொள்ளப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மூலம் கிடைத்த புதிய சான்றுகள் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) கங்கைகொண்ட சோழபுரம் கோயிலுக்கு அருகிலுள்ள மாளிகைமேடு என்னும் பகுதியில் பிப்ரவரி 1980 முதல் அகழ்வாய்வு செய்யப்பட்டு வருகிறது. இவ்வகழ்வாய்வில் சோழர்கால அரண்மனையின் கட்டிடப்பகுதிகள், சீன நாட்டு பானை ஓடுகள், தந்தம், எலும்பு பொருட்களில் செய்யப்பட்ட அழகு பொருள்கள், வேலைப்பாடு அமைந்த கற்கள், இரும்பு ஆணிகள், கத்தியின் கைப்பிடி முதலியன கிடைத்துள்ளன. இங்கு கிடைக்கப்பெற்ற பொருட்களின் வாயிலாகவும், கோயில் கல்வெட்டுகளினாலும் சோழர் காலத்தில் தலைநகரமான கங்கைகொண்டசோழபுரத்தில் கட்டிடங்கள் எவ்வாறு சிறப்புற்று இருந்தன என அறிகிறோம்.